(3) 27—3—1975 அன்று திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சிலிருந்து நீக்கப்பட்ட சில பகுதிகள் மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்வது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 27—3—1975 அன்று சட்டக் கல்லூரி மாணவர் விடுதி சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள்—

கே. டி. கே. தங்கமணி,
கோவை செழியன்,
டாக்டர் ஹாண்டே,
ஜே. ஜேம்ஸ்,
என். கே. பழனிசாமி,
எஸ். அழகர்சாமி,
எம். சுரேந்திரன்.

ஆகியோர் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தானும் கருத்துத் தெரிவிக்க முயன்ற போது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான நோட்டீஸ் கொடுத்த உறுப்பினர்கள் தவிர்த்த வேறு உறுப்பினர்கள் கருத்தறிவிக்க விதிகளில் இடமில்லை என மறுத்தும், அதன் பின்னர், திரு. கிருஷ்ணமூர்த்தி "Point of order" என்று கூறி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி எதுவும் கூறாமல், மாணவர் விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறியதும், அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது, ஆகவே, அவர் பேசியதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தீர்ப்பு வழங்கியது, நம்முடைய விதி

83 (8) "The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members when in his opinion it is an abuse of the right of raising a point of order".

எனத் தெளிவாகக் கூறுவதால், முற்றிலும் முறையான தீர்ப்பே ஆகும்.

எனினும் விதிகள் தெளிவாக இருப்பினும், சிற்சில சமயங்களில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அறிக்கை கொடுக்காத உறுப்பினர்களும் கருத்துக்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

16—8—68 அன்று, உடையார்பாளையத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூடு பற்றி திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் போதும் 6—12—1972 அன்று திருச்சி கிளைவ் விடுதி மாணவர்கள் தாக்கப்பட்டது குறித்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் போதும், ஒத்தி வைப்புத் தீரமானத்திற் கான அறிக்கை கொடுக்காத உறுப்பினர்கள் சிலரும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற போர்வையில் கருத்துக்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அது நாம் வகுத்துக் கொண்டிருக்கிற விதி முறைகளுக்கு முற்றிலும் மாறுனது என்றுலும் சூழ்நிலையை நோக்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதை யொட்டியே திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்று கூறியவற்றையும் அப்பேச்சில் சாதி குறித்துக் கூறிய சில தொடர்களை நீக்கிவிட்டு நிகழ்ச்சிக் குறிப்பில் இடம் பெற அனுமதிக்கிறேன்.

இவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் போது அதற்கான அறிக்கை கொடுக்காத உறுப் பினர்கள் இடையில் எழுந்து கருத்துக்களை வழங்குவது இதுவே கடைசி நிகழ்ச்சியாக அமையட்டும். இனி அப்படிப்பட்ட நிகழ்ச் சிகள் அனுமதிக்கப்படமாட்டா. பேரவைத் தலைவர் அனுமதி யின்றி பேசப்படும் பேச்சுக்கள் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டிப் பாக அனுமதிக்கப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

(4) நடைமுறைக் கேள்விகள்.

(அ) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரால் நீக்கப்பட்ட சில பகுதிகளை மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என மாண்புமிகு பேரவைத் தலைவர் ஒரு வாரத்திற்குப் பிறகு ஆணையிடலாமா என்பது குறித்து.

DR. H. V. HANDE : I am on a very valid point of order. I am not going into the question of whatever you have stated about the matter. My point of order is this. I am given to understand that hereafter it may be possible for us to come before the Speaker and persuade him to de-expunge whatever has been expunged. Particularly, what I am referring to is. . . .